ගරු ජනාධිපතිතුමනි,

මා සභාපතිත්වය දරණ ''සංහිඳියා යාන්ත්‍රණ උදෙසා වන ප්‍රවිචාරණ කාර්ය සාධක බලකායේ'' අවසාන වාර්තාව ඔබතුමාට මේ අවස්ථාවේ පිළිගැන්වීමට ලැබීම, මට සතුටක් වගේම, ගෞරවයක්.

මේ රටේ සංහිඳියාව සඳහා අවශ්‍යයි යැයි සැළකෙන ව්‍යුහයන් ගැන, සංහිඳියාව නැති කම නිසා පීඩා වින්ද ජනතාවගේ අදහස් ලබා ගැනීම සඳහා ඔබතුමා නායකත්වය දෙන වර්තමාන ආණ්ඩුවේ අග්‍රාමාත්‍ය ගරු රනිල් වික්‍රමසිංහ මැතිතුමා අපට පැවරූ වරම ප්‍රකාරව, රට පුරා මහජන අදහස් විමසීමත්, ඒවා පදනම් කරගෙන අපේ නිර්දේශ ඉදිරිපත් කිරීමත්, අපි භාරගත්තා. ඒ කර්තව්‍යය අපි දැන් අවසන් කොට තිබෙනවා. මේ සම්බන්ධයෙන්, ගරු විදේශ අමාත්‍ය මංගල සමරවීර මැතිතුමා අපට දුන් ඉමහත් සහයෝගයත්, ඒ වෙනුවෙන් සියලු පහසුකම් සැලසීම ගැනත්, මුලින්ම මම අපේ බලවත් ස්තුතිය එතුමාට පුද කළ යුතුයි.

අපි ඉදිරිපත් කරන මේ වාර්තාවෙන් නිරූපණය වන්නේ, ප්‍රවිචාරණය සඳහා සහභාගී වූවන්ගේ අත්දැකීම් සහ අදහස් වුවත්, 'විධායක සාරාංශය සහ නිර්දේශ' කොටස අයත් වන්නේ 'කාර්ය සාධක බලකායට' බවත්, ඒ පිළිබඳ පූර්ණ වගකීම කාර්ය සාධක බලකාය භාර ගන්නා බවත් මම සඳහන් කරන්න ඕනේ. සම්පූර්ණ වාර්තාව තව පැය කිහිපයකින් 'සංහිඳියා යාන්ත්‍රණ සඳහා වන ලේකම් කාර්යාලයීය' වෙබ් අඩවියේ පළ වන අතර, වාර්තාවේ 'විධායක සාරාංශය' සහ අපේ 'නිර්දේශ' සිංහලෙන්, දෙමළෙන් සහ ඉංග්‍රීසි භාෂාවෙන් දැන් තමුන්නාන්සේලා අතට පත්ව ඇති. සම්පූර්ණ අවසාන වාර්තාව සිංහල සහ දෙමළ භාෂාවෙන් තවම පළවී නොතිබීම ගැන මේ අවස්ථාවේ මගේ කණගාටුව ප්‍රකාශ කර සිටින අතර, ඉතා කෙටි කලකින් වෙබ් මාධ්‍යයෙන් සහ මුද්‍රිත මාධ්‍යයෙන් එය පළ කිරීමට කටයුතු සලසන බවට 'සංහිඳියා යාන්ත්‍රණ සඳහා වන ලේකම් කාර්යාලයේ' මහ ලේකම්වරයා මට සහතික වී තියෙනවා.

අද මෙතන රැස්ව සිටින ''ප්‍රතිචාරණ කාර්ය සාධක බලකායේ'' අපිත්, මේ ක්‍රියාවලියේ සම-පාර්ශ්වකරුවන් වුණු 'කලාප කාර්ය සාධක බලකායන්' පහළොවේ සාමාජිකයනුත් යන සියල්ලන්ම, මේ රටේ සිවිල් සමාජයේ සාමාජිකයන් වීම විශේෂිතයි. රටේ පොදු ප්‍රශ්නවලදී අගතියට පත් වින්දිතයන් වෙනුවෙන් එක දිගටම වැඩ කරපු ගෞරවනීය අතීතයක් මේ සෑම සාමාජිකයෙකුටම තියෙනවා. අගමැතිවරයා විසින් ඔහුගේ උපදේශක සභාවේ නිර්දේශ මත 'ප්‍රතිචාරණ කාර්ය සාධක බලකාය' ස්ථාපිත කෙරුණු අතර, සාමාජිකයන් 92 ගෙන් සමන්විත 'කලාපීය කාර්ය සාධක බලකායන්' 15 පත් කරන ලද්දේ අප විසින්. ඒ ඒ ප්‍රදේශවල සිවිල් ක්‍රියාකාරකම්වල නියුතු විද්වත් නියෝජිතයන් ඊට අයත් වෙනවා. මේ කර්තව්‍යය ප්‍රාදේශීය මට්ටමෙන් සාර්ථක කර ගැනීමට ඔවුන් සැපයූ තීරණාත්මක සහ වැදගත් දායකත්වය ගැන මගේ හද පත්ලෙන් නැගෙන ප්‍රශංසාව ප්‍රකාශයට පත් කිරීමටත්, මේ ඓතිහාසික මොහොත මං අවස්ථාවක් කර ගන්නවා.

ඒ අනුව, අද ඔබතුමාට භාර කෙරෙන මේ වාර්තාව, මුළුමණින්ම, 'සිවිල් සමාජ වාර්තාවක්' බව මම අවධාරණය කරන්න ඕනේ. මහජන ප්‍රතිචාරණයන් සිද්ධ කෙරුණේ, අද මෙතන රැස්ව සිටින උපදේශක මඩුල්ලක් ඇතුළු සිවිල් සමාජයේ අප විසින් තීරණය කරන ලද නිශ්චිත ක්‍රියාපරිපාටියකට අනුගතවයි.

ජනතාව අත්වින්ද කටුක අත්දැකීම්වල විවිධ පැතිකඩ වගේම, ඒවාට අවශ්‍ය කරන විසඳුම් ගැන ඔවුන් දරණ විවිධ මතිමතාන්තර ගැන ද, යුක්තිය සහ සාධාරණත්වය මත පදනම් වෙන තිරසාර සාමයක අනාගතයක් ගැන බලාපොරොත්තු තියා ගැනීමට ඉවහල් වන සමාජයීය සහ අන්තර්-පුද්ගල සම්බන්ධතා සම්බන්ධයෙන් ඇති කර ගත යුතු වෙනස්කම් සහ ඒවා පිළිබඳ ඔවුන්ගේ අවබෝධය වැනි විවිධ කාරණා ද ඇතුළත් කර ගත් ප්‍රතිචාරණයේ සාර්ථකත්වය, මුළුමණින්ම එම සිවිල් සමාජ සහභාගීත්වයේ ප්‍රතිඵලයක් බව කිව යුතුයි. තිරසාර සාමය සහ සංහිඳියාව පිළිබඳ මේ ගමනේ සාර්ථකත්වය සඳහා අනාගතයේ අවශ්‍ය කෙරෙන විවිධ පියවර ගැනීමේදී එකී සිවිල් සමාජ අත්දැකීමට ප්‍රමුඛ ස්ථානයක් හිමි විය යුතු යැයි මා සිතනවා. මේ වාර්තාව, එම දීර්ඝ ගමනේ ප්‍රථම පියවරක් විතරයි.

කෙසේ වෙතත්, මෙය මුළුමණින්ම සිවිල් සමාජ ක්‍රියාවලියක් වශයෙන් මා අවධාරණය කළත්, තවත් සුවිශේෂී කාරණයක් ද ඊට දායක වූ බව නොවලහා කිව යුතුයි. එනම්, අපේ ප්‍රයත්නය පසුපස වර්තමාන රජයේ අනුමැතිය සහ අනුග්‍රහයත් පවතින බවට වින්දිතයන් තුළ පැවති දැඩි විශ්වාසයයි. අතීතයේ ලබා ඇති නීරස අත්දැකීම් නිසා යම් කිසි සැකයක් සහ ඇතැම් විට එක්තරා විරෝධයක් ද සහිතව වුවත්, එම ජනතාව ස්වකීය අදහස් දැක්වීමට අපි ඉදිරියට පැමිණීම වැදගත්. එසේ පැමිණි ජනතාව කිව්වේ එක දෙයයි.

එනම්, ''අපි අත්වින්ද මහා ආපදාවට මේ ආණ්ඩුවෙන් පිළිසරණක් නොලැබුණොත්, වෙන කිසි දවසක නැවතත් එවැන්නක් ගැන විස්වාසයක් තියාගන්න අපිට පුළුවන් කමක් නැහැ'' කියන එකයි.

ඒ අනුව බලන විට, තම ඡන්ද අයිතිය පාවිච්චි කිරීම හරහා තමන් දිනා ගත් මේ අවස්ථාව ඔස්සේ එම ජනතාවගේ බලාපොරොත්තුව වන්නේ, කිසිවක් සිදු නොවිණැයි කී ඒ අකාරුණික යුගයෙන් ඔබ්බට ගොස්, තමන් මුහුණදුන් අයුක්තියට යම් යුක්තියක් ඉෂ්ට කරවා ගැනීමයි. තීන්දු තීරණ ගැනීමේ ක්‍රියාවලිය තුළ තමන්ගේ හඬටත් අවස්ථාවක් ලබා ගැනීමයි. එය ජනතාවකගේ දේශපාලනික අයිතිය පිළිබඳ මූලික අංගයක් වශයෙන් මා සළකනවා.

ඒ නිසා ඔවුන් විශාල වශයෙන් මේකට සම්බන්ධ වුණාඃ සැකයෙන් තමයි. ඒ වගේම, අඩමානයෙන් සහ යම් ආකාරයක විරෝධයකින් තමයි. ඒ ගැන ඔවුන්ට දොස් කියන්න පුළුවන් කාටද? ඒත් ඔවුන් සියල්ලන්ම ආවේ දහසකුත් එකක් අපේක්ෂා දල්වාගෙන. ඇති වුණු සහ ඇති වෙමින් පවතින දේවල් ගැන මුහුකුරා ගිය නිරීක්ෂණයන්ද සහිතව.

කරුණාකර මේ වාර්තාව කියවන්න. එය සකස් කිරීමේදී, එම ජනතාවගේ අදහස්වලට සහ මනෝ භාවයන්ට මුළුමණින් සත්‍යවාදී වීමට අපි හැම පියවරක්ම අරගෙන තියෙනවා. මෙහිදී මගේ මතකයට නැගෙනවා, ඉරිච්ච කඩදාසි කැල්ලක වෙව්ලන අත්අකුරෙන් 'කාර්ය සාධක බලකායට' සටහනක් ලියලා එවපු හිගන කාන්තාවඃ ''යුද්ධෙන් නැති වෙච්ච මගේ පුතා හිටියා නං, මං අද හිඟාකන්නේ නැහැ'' කියලා ඈ ලියලා තිබුණාඃ ගරා වැටිච්ච ගේ කැල්ලක, තමන්ගේ දරුවන්ව ජීවත් කරවන්නයි, යුද්ධය නිසා සිහිවිකල් වෙච්ච

තමන්ගේ සැමියාව රැකබලා ගන්නයි, දිනපතා කෑම උයලා වෙළඳාම් කරන තරුණ අම්මාව මට මතක් වෙනවාඃ සරණාගත කඳවුරක අඩි හයක් මිස ගේ දොරක් ගැන අදහසක් නැති පොඩි දැරියක් තුළ සාමාන්‍ය ඉස්කෝල පරිසරයකට තියෙන ආශාව මට මතක් වෙනවාඃ පුනරුත්ථාපනය වෙච්ච හිටපු සටන්කරුවෙක්, අන්‍යෝන්‍ය සහයෝගීතා ජාලයක් ඇතුළේ, අපි කාටත් ආදර්ශමත් ඉදිරි ජාතික ව්‍යාපාරයක් තුළ, තමන්ගේ දුකට පත් සගයන්ව සංවිධානය කරන ඒ නායකත්ව හැකියාව සහ ශක්තිය මට මතක් වෙනවාඃ හම්බන්තොට පැත්තේ අතුරුදහන් වෙච්ච කෙනෙක්ගේ බිරිඳක් තම සැමියා හොයන්න අවුරුදු විසිපහක් තිස්සේ වින්ද නිරර්ථක දුක් මහන්සිය විස්තර කරපු හැටි මට මතක් වෙනවාඃ එච්චර කටුක අත්දැකීම් ඇති එම කාන්තාව තුළ තවමත් ඉතුරු වෙලා තියෙන අනුකම්පාව ඇගේම වචනවලින් කියනවා නං මෙහෙමයිඃ ''දකුණේ ඉන්න සිංහල ගෑනියෙක් වෙන මගේ තත්වේ මේක නං, උතුරේ තත්වේ කොහොමට ඇත්ද?'' මේ හැම දෙයක්ම මේ වාර්තාව ඇතුළේ තියෙනවා. ඒ වගේම, ඉදිරි ජීවිත කාලයම තව කාගේ හරි හව්හරණක් යටතේ ජීවත් වෙන්න බල කෙරිලා තියෙන, යුද්ධෙදී බරපතල තුවාල ලබපු හිටපු හමුදා සෙබළෙක් කියපු කතාවත් මට මතක් වෙනවාඃ ''අපි හැමෝම මේකෙන් විඳවලා තියෙනවා.'' ඔහු කිව්වේ එහෙමයිඃ ඒ වගේම, කාලාන්තරයක් අනේක දුක් ගැහැටවලට ලක්වෙච්ච, කොන් කිරීමට ලක්වෙච්ච, මලෙයිහා දෙමළ ජාතික ආදිවාසියෙක් තවමත් රටට සේවයක් කරන්න අධිෂ්ඨාන කරගෙන ඉන්න හැටිඃ මෑතකදී ඇති වෙච්ච දේශපාලනික ප්‍රහාරයන් ගැන කේන්තියෙන් හිටියත් පැහැදිළි ජාතික අනන්‍යතාවක් පිළිබඳ හැඟීමෙන් ඉන්න මුස්ලිම් ජාතිකයාඃ යුද්ධ තත්වයක් තුළ වුවත්, අත්අඩංගුවේදී සිද්ධ වෙන කාන්තා දූෂණ, ඔප්පු වුණොත්, දැඩි දඬුවම් පැමිණවිය යුතු බව කියන උසස් නිලධාරීන් ආදී සෑම කෙනෙක්ම මේ වාර්තාව ඇතුළේ ඉන්නවා. ඒ සමස්ත අන්තර්ගතය තුළ නින්නාද වන්නේ, හානි පූරණය සඳහා වන ඔවුන්ගේ ඉල්ලීමයි. වගවීම පිළිබඳව වගේම, නැවත මෙවැනි දේවල් ඇති නොවීම පිළිබඳව ඔවුන් තුළ පවතින අපේක්ෂාවයි. ඒ සියල්ලටමත් වඩා, සත්‍යයට මුහුණදීමේ ඇති වැදගත්කමයි. ඒ සියල්ල, 'සංක්‍රාන්තික යුක්තිය' යනුවෙන් හඳුන්වන ක්‍රියාවලියේ ආනුශංගික අංගෝපාංග බව මම කියන්න කැමතියි.

අපේ ''ගෙය'', ශ්‍රී ලංකාව හොඳටම අබලන් වෙලා. හුණු ගාලා, දූවිලි ගසලා දාලා හරිගස්ස ගන්න පුළුවන් ගෙයක් නෙවෙයි ඒක. අපේ රටේ ජීවත් වෙන, විවිධත්වයෙන් පොහොසත් විවිධ ජාතීන්ගෙන් සමන්විත මේ මහා පවුල, භේදකාරී ආකෘතියකට බිලි වීමේ අවදානමක් තියෙනවා. එනම්, ''උන් සහ අපි'' කියන භේදය. ඒක, දීර්ඝ සිවිල් යුද්ධයකට හේතු වුණු වගේම, යුද්ධයේ ප්‍රතිවිපාකයකුත් වූ අනිවාර්ය අංගයක්. අපි එක පත බෙදාගෙන කන්න තීරණය කරනවද නැත්ද කියන එක මෙහිදී අදාළ නැහැ. වැදගත් වෙන්නේ, සම්පත් සහ අවස්ථා බෙදා හැරීමේදී, යුක්තිය සහ සාධාරණත්වය උඩ කටයුතු කරමින් සියල්ලන්ගේ අයිතිවාසිකම් ආරක්ෂා කෙරෙන සමාජ සහ රාජ්‍ය ව්‍යුහයන් ගොඩනගා ගැනීමයි. වඩාත් ශක්තිමත්ව අපි හැමෝටම එකටම නැගී හිටින්ට පුළුවන් වෙන්නේ එතකොට විතරයි.

අපේ සුපුරුදු ගාථා බණ්ඩයකින් මං මගේ කතාව අවසන් කරනවාඃ

''දේවෝ වස්සතු කාලේන-රාජා භවතු ධම්මිකෝ''

සියල්ලන්ටම බෙහෙවින් ස්තුතියි..

**அதிமேதகு ஜனாதிபதி அவர்களே,**

நான் தலைமைத்துவம் வகிக்கும் ‘‘நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான கலந்தாலோசனைச் செயலணியின்’’ இறுதி அறிக்கையைத் தங்களுக்குச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் கிட்டியமையையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நாட்டின் நல்லிணக்கத்திற்கு அவசியமானதெனக் கருதும் ஓர் கட்டமைப்புப்பற்றியும், நல்லிணக்கம் இல்லாததன் காரணமாக பாதிப்புக்குள்ளான மக்களின் கருத்தறிவதற்கும், தாங்கள் தலைமை தாங்கும் தற்போதைய அரசாங்கத்தின் பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் எம்மிடம் ஒப்படைத்த பணிப்பாணைக்கு அமைய, நாடு முழுவதும் பொதுமக்களின் கருத்தைக் கண்டறிவதற்கும், அவற்றை அடிப்படையாகக் கொண்டு எமது பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கும், நாம் பொறுப்பேற்றோம். மேற்படி பணியினை நாம் தற்போது நிறைவுசெய்துள்ளோம். இது தொடர்பாக கௌரவ வெளிநாட்டு அமைச்சர் மங்கள சமரவீர அவர்கள் எமக்கு வழங்கிய பாரிய ஒத்துழைப்பு, அது தொடர்பாக அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தியமை குறித்தும், நான் முதலில் எமது நன்றியை அவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

கலந்தாலோசனையின்போது பங்குபற்றியோரின் அனுபவங்களும், கருத்துக்களும் நாம் சமர்ப்பிக்கும் அறிக்கையில் வெளிப்படுத்தப்படுகின்றன. எனினும், ‘நிறைவேற்று சாராம்சமும் பரிந்துரைகளும்’ என்ற பகுதி ‘செயலணிக்கு’ உரித்தாகும். இதுபற்றிய முழுமையான பொறுப்பை செயலணி ஏற்றுக்கொள்ளுகின்றது என்பதை நான் குறிப்பிட வேண்டும். இவை நாம் சமர்ப்பிக்கும் இந்த அறிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. முழு அறிக்கையும் இன்னும் ஒருசில மணித்தியாலங்களில் ‘நல்லிணக்க பொறிமுறைகளுக்கான செயலகத்தின்’ இணையதளத்தில் வெளியிடப்படும். மேற்படி அறிக்கையில் ‘நிறைவேற்று சாராம்சமும்’ ‘எமது பரிந்துரைகளும்’

சிங்களத்திலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் தற்போது தங்களுக்கு வழங்கப்படுகிறது. முழுமையான இறுதி அறிக்கை சிங்களத்திலும் தமிழிலும் இதுவரை வெளியிட முடியாமையையிட்டு இச் சந்தர்ப்பத்தில் எனது கவலையைத் தெரிவிக்கின்றேன். இறுதி அறிக்கை குறுகிய காலத்தில் இணையத்தின் மூலமும், அச்சு ஊடகத்தின் மூலமும் வெளியிடப்படுமென 'நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான செயலகத்தின் செயலாளர் நாயகம் எனக்கு உறுதியளித்துள்ளார்.

இன்று இங்கு கூடியுள்ள "கலந்தாலோசனைக்கான செயலணி உறுப்பினர்களான" நாமும் இச் செயற்பாட்டின் சம பங்காளர்களாகப் பணியாற்றிய 15 'வலயச் செயலணிகளின்' உறுப்பினர்களாகிய அனைவரும், இந்நாட்டின் சிவில் சமூகத்தின் உறுப்பினர்கள் என்பதை இங்கு குறித்துரைக்க வேண்டும். நாட்டின் பொதுப் பிரச்சினைகளின்போது பாதிக்கப்பட்டோரின் சார்பில் தொடர்ச்சியாகப் பணியாற்றிய மதிப்பு வாய்ந்த கடந்தகாலம் இந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் உண்டு. பிரதமர் அவரது ஆலோசனைச் சபையின் பரிந்துரைகள்மீது "கலந்தாலோசனைக்கான செயலணியை" நியமித்தார். 92 உறுப்பினர்களைக்கொண்ட 15 'வலயச் செயலணிகளை' நாம் நியமித்தோம். குறித்துரைக்கப்பட்ட பிரதேசங்களில் சிவில்சமூக செயற்பாட்டாளர்களாகப் பணியாற்றிய சிறப்புமிகு பிரதிநிதிகள் 'வலயச் செயலணிகளில் உள்ளடக்கப்பட்டனர். இச் செயற்பாட்டை பிரதேச மட்டத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அவர்கள் வழங்கிய முக்கியத்துவம் வாய்ந்த - தீர்மானகரமான பங்களிப்புப் பற்றி எனது இதயபூர்வமான பாராட்டுக்களை இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதற்கமைய, இன்று தங்களிடம் ஒப்படைக்கப்படும் இந்த அறிக்கை, முழுமையாக, 'சிவில் சமூகத்தின் அறிக்கை' என்பதை வலியுறுத்துகின்றேன். இங்கு கூடியிருக்கும் ஆலோசனைச் சபை உட்பட, சிவில் சமூகத்தைச் சார்ந்த

எம்மால் தீர்மானிக்கப்பட்ட திட்டவட்டமான நடைமுறைகளுக்கேற்ப பொதுமக்களின் கலந்தாலோசனைகள் இடம்பெற்றன.

மக்கள் அனுபவித்த துன்பகரமான அனுபவங்கள் பல்வகைமை கொண்டவை. இதன்போது, அவற்றிற்கு அவசியமான தீர்வுகளைப்பற்றி அவர்கள் கொண்டுள்ள பன்மைத்துவ கருத்துக்களையிட்டும், நீதியையும் நியாயத்தையும் சமத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட, நிலைபேறான சமாதானத்தின் எதிர்காலம் பற்றி நம்பிக்கை வைப்பதற்கு ஏதுவான சமூக மற்றும் ஆட்களுக்கிடையிலான உறவுகள் தொடர்பாகவும், உருவாக்கிக் கொள்ள வேண்டிய மாற்றங்கள் மற்றும் அவற்றைப்பற்றிய அவர்களின் புரிந்துணர்வு போன்ற பல்வேறு விடயங்களையும், உள்ளடக்கிய கலந்தாலோசனைகளின் வெற்றி, ஒட்டுமொத்தமாக இச் சிவில் சமூகப் பங்களிப்பின் விளைவு என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். நிலைபேறான சமாதானத்தினதும் நல்லிணிக்கத்தினதும் இப்பயணத்தின் வெற்றிக்காக எதிர்காலத்தில் அவசியமான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, மேற்படி சிவில் சமூகத்தின் அனுபவங்களுக்கு முக்கிய இடம் உரித்தாக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்றேன். இந்த அறிக்கை, மேற்படி நீண்ட பயணத்தின் முதல் படியாகும்.

எவ்வாறாயினும், இது முழுமையாக சிவில் சமூகச் செயற்பாடாகவே நான் வலியுறுத்துகிறேன். இருப்பினும், மற்றுமொரு விசேட அம்சமும் இச்செயற்பாட்டில் பங்கேற்றது என்பதை கூறியே ஆகவேண்டும். அதாவது, எமது முயற்சியின் பின்னால் தற்போதைய அரசின் அங்கீகாரமும் அனுசரணையும் உண்டென பாதிக்கப்பட்டோருக்கு உறுதியான நம்பிக்கை இருந்தது. கடந்த காலத்தில் பெற்ற, கசப்பான அனுபவங்களின் நிமித்தம், ஏதாவது சந்தேகம் சிலவேளை ஓர் எதிர்ப்பை ஏற்படுத்திய போதிலும், இம்மக்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு எம்முன்னால் வருகை தந்தமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இவ்வாறாக வருகை தந்த மக்கள் ஒரு விடயத்தை வலியுறத்திக் கூறினர்.

அதாவது, ‘‘நாம் அனுபவித்த மாபெரும் அனர்த்தங்களுக்கு, இந்த அரசாங்கம் உதவி வழங்காவிடின், வேறு ஒருபோதும் இதுபற்றிய நம்பிக்கையை வைக்க எம்மால் முடியாது’’ என்பதே இக்கூற்றாகும்.

இவ்வாறு நோக்கும்போது, தமது சர்வஜன வாக்குரிமையைப் பயன்படுத்துவதன் மூலம், தாம் வென்றெடுத்த இச்சந்தர்ப்பத்தின் ஊடாக எதுவுமே நடக்கவில்லை என்ற அத்துன்பகரமான எதிர்பார்ப்பிற்கு அப்பால் சென்று, தாம் எதிர்நோக்கிய அநீதிக்கு நியாயத்தைப் பெறுவதே அம்மக்களின் எதிர்பார்ப்பாக அமைந்தது. தீர்மானங்களையும், முடிவுகளையும் மேற்கொள்ளும்போது தமது குரலுக்கும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்பதே அம்மக்களின் எதிர்பார்ப்பாகும். இது மக்களின் அரசியல் உரிமைபற்றிய அடிப்படை அம்சமாகவே நான் கருதுகின்றேன்.

எனவே, அவர்கள் இச் செயற்பாட்டில் அதிக அளவில் பங்களிப்புச் செய்தனர். சந்தேகத்துடனேயே அவர்கள் பங்குகொண்டனர். அதேசமயம், நிச்சயமற்ற வகையிலும் ஓரளவு எதிர்ப்புடனும் அவர்கள் பங்கு கொண்டனர். இதுகுறித்து மக்கள்மீது யார் குறைகூற முடியும்? எனினும் அவர்கள் அனைவரும் ஓர் எதிர்பார்ப்புடனேயே வருகை தந்தனர். தாம் அனுபவித்த, அனுபவித்துக் கொண்டிருக்கும் விடயங்கள் தொடர்பான முதிர்ச்சிகொண்ட அவதானிப்புடனேயே அவர்கள் பங்குபற்றினர்.

தயவு செய்து இவ்வறிக்கையை வாசியுங்கள். இதைத் தயாரிக்கும்போது மேற்படி மக்களின் கருத்துக்களுக்கும், மனஉணர்வுகளுக்கும் நேர்மையாக நடந்துகொள்ள நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். கிழிந்துபோன ஓர் கடதாசித்துண்டில் நடுங்கிய கையெழுத்துடன் ‘கலந்தாலோசனை செயலணிக்கு’ ஓர் குறிப்பை எழுதி அனுப்பிய ஓர் பிச்சைக்காரப் பெண்மணியை இங்கு நான் நினைவுகூர விரும்புகிறேன். ‘‘போரின் காரணமாக நான் இழந்த, எனது மகன் உயிரோடு இருந்திருந்தால் இன்று நான் பிச்சையெடுக்க மாட்டேன்’’ என்று அப்பெணமணி எழுதியிருந்தார். இக்கூற்று எனது உள்ளத்தில்

எதிரொலித்துக் கொண்டேயிருக்கிறது. இடிந்து விழுந்த குடிசையில், தனது பிள்ளைகளை வாழவைப்பதற்காகவும், போரின் காரணமாக மனநோயினால் பாதிக்கப்பட்ட தனது கணவனைப்பாதுகாக்கவும், நாளாந்தம் உணவு சமைத்து விற்பனை செய்யும் இளம் தாய் எனது ஞாபகத்திற்கு வருகிறார். ஆறடி அகதி முகாம் தவிர வீடுவாசல் பற்றிய எதிர்பார்ப்பே இல்லாத ஒரு சிறுமி, சாதாரண பாடசாலைக்கு அவள் கொண்டிருந்த ஆசை எனது ஞாபகத்திற்கு வருகிறது. புனர்வாழ்வு பெற்ற முன்னைநாள் போராளி ஒருவர், துன்புறும் தனது சகபாடிகளுக்காக ஒழுங்கு செய்திருந்த, தலைமைத்துவ ஆற்றல் மற்றும் வலுவூட்டலுக்கான பரஸ்பர வலயமைப்பு, எதிர்காலத் திட்டமிடல் தேசிய இயக்கத்தின் முக்கியத்துவத்தை எம் எல்:லோருக்கும் ஞாபகப்படுத்துகிறது. அம்பாந்தோட்டை பிரதேசத்தில் காணாமற் போன ஒருவரின் மனைவி தனது கணவரைத் தேடி 25 ஆண்டுகளாக தொடர்ச்சியாக அனுபவித்த துன்பங்களையும், கஷ்டங்களையும் அவர் விபரித்த விதம் எனது உள்ளத்தை உறுத்துகிறது. இத்தகைய துன்பகரமான அனுபவங்களைக் கொண்ட இப்பெண்மணி மீது எஞ்சியிருக்கும் அனுதாபத்தை அவளது சொற்களில் கூறுவதாயின், ‘‘தென்னிலங்கையில் வாழும் சிங்களப் பெண்ணான எனது நிலைமை இதுவாயின், வடபுலத்தின் நிலைமை எப்படி இருக்கும்? ’’ இச்சகல விடயங்களும் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதேசமயம், வேறு யாரோ ஒருவருடைய உதவியுடன், எஞ்சிய வாழ்க்கையையும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள, போரினால் கடுமையான காயங்களுக்கு உள்ளான முன்னைநாள் படைவீரர் கூறிய கதை எனது ஞாபகத்திற்கு வருகிறது. ‘‘நாங்கள் எல்லோரும் போரினால் அவலங்களை அனுபவித்து இருக்கிறோம்.’’ அவர் அவ்வாறகவே குறிப்பிட்டார். அதேசமயம், நீண்டகாலமாக பல்வேறு துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்த, பாரபட்சத்திற்கு உள்ளான, இலங்கையின் மலையகத் தமிழர்களும், ஆதிவாசிகளும் தொடர்ந்தும் நாட்டிற்கு சேவையாற்றும் திடசங்கற்பத்துடன் இருப்பதையும் நான் கண்டறிய முடிந்தது. அண்மையில் ஏற்பட்ட அரசியல் தாக்குதல் காரணமாக முஸ்லிம் சமூகம் கோபடைந்திருந்தாலும், மிகத் தெளிவான தேசிய அடையாளம்பற்றிய

உணர்வுடனேயே உள்ளனர். யுத்த நிலைமைகளின் கீழும், கைது செய்யப்பட்டிருக்கையில், பெண்களுக்கெதிரான பாலியல் வல்லுறவுகள் நிரூபிக்கப்பட்டால், கடுமையான தண்டனைகளை வழங்க வேண்டுமெனக் கூறும் உயர் அதிகாரிகளும் கருத்துக் கூறியுள்ளனர். இவர்கள் அனைவரது கூற்றுக்களும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த ஒட்டுமொத்தமான உள்ளடக்கத்துக்குள் இழப்பீடுகளுக்கான அவர்களது கோரிக்கை எதிரொலிக்கின்றது. வகைப்பொறுப்பு பற்றியும், இத்தகைய சம்பவங்கள் மீள் நிகழாமைபற்றியும் அவர்களிடம் காணப்படும் எதிர்ப்பார்ப்புக்கள்

இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றன. எல்லாவற்றையும்விட, உண்மையைக் கண்டறிய வேண்டிய முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது. இவை அனைத்தும் ‘நிலைமாற்று நீதி’ என அறிமுகப்படுத்தப்படும் நடைமுறையின் இடைநேர் விளைவான அம்சங்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

எமது ‘‘வீடான’’ இலங்கை நன்கு பழுதாகி விட்டது. தூசைத் தட்டி, சுண்ணாம்புப் பூசி, சீர்செய்ய முடியாத வீடாகவே அது உள்ளது. பன்மைத்துவத்தினால் வளம்பெற்று, எமது நாட்டில் வாழும் பன்மைத்துவ இனங்களை உள்ளடக்கிய பெரும் குடும்பம், பேதம்கொண்ட அபாய வாய்ப்பைக் கொண்டுள்ளது. அதாவது ‘‘அவர்களும் நாமும்’’ என்ற பேதம். இது, நீண்ட சிவில் யுத்தத்திற்கு காரணமாகியதோடு, யுத்தத்தின் விளைவான கட்டாய அம்சமாகவும் மாறியுள்ளது. எமக்குக் கிடைக்கும் உணவை பகிர்ந்து உண்ண நாம் தீர்மானிப்பதா? இல்லையா? என்பது இங்கு ஏற்புடையதல்ல. வளங்களையும் வாய்ப்புக்களையும் பகிரும்போது, நீதி நியாயத்தின்படி செயற்பட்டு அனைவரது உரிமைகளையும் பேணிப்பாதுகாக்கும் சமூக மற்றும் அரச கட்டமைப்பை உருவாக்கிக்கொள்ள வேண்டும். நாம் எல்லோரும் சக்திபெற்று ஒன்றாக எழுச்சியுற வேண்டுமாயின் இதனையே செய்தல் வேண்டும்.

**“வான்முகில் வழாது பெய்க!**

**மலிவளம் சுரக்க!**

**மன்னன் கோன்முறை அரசு செய்க!**

**குறைவிலாது உயிர்கள் வாழ்க!”**

என்ற மங்கல வாழ்த்துப் பாடலுடன் எனது உரையை நிறைவுசெய்கின்றேன். அனைவருக்கும் நன்றி !

**சட்டத்தரணி மனோரி முத்தெட்டுவேகம**
தவிசாளர்
நல்லிணக்க பொறிமுறைகளுக்கான கலந்தாலோசனைச் செயலணி

I take pleasure in presenting to you the Final Report of the Consultative Task force on Reconciliation Mechanisms which I chair.

The Mandate entrusted to us by the Prime Minister on behalf of the Govt you lead directed us to hold consultations country-wide to ascertain the views of the affected on the structures they consider required to bring about reconciliation and make our recommendations in the light of the evidence gathered at consultations. We have completed the task entrusted to us, & I wish to place on record right at the outset our deep-felt thanks for the unfailing assistance & facilitation we received from the Minister of Foreign Affairs the Hon: Mangala Samaraweera in this regard.

While the report we present depicts the experience and opinions of the participants at Consultations, the Executive Summary and Recommendations are ours of the Task Force; we take full responsibility for them. The full report in English will be available in the next few hours on the web site of SCRM, while the Executive Summary of the Report and our Recommendations thereon are in your hands now, in Sinhala, Tamil and English languages. We regret that the Final Report is not immediately ready in Sinhala and Tamil. Secretary-General of SCRM who has undertaken the responsibility of translation assures me they will be available shortly on the web and in print.

We of the Task force & the members of the 15 Zonal Task Forces who form an integral part of the process undertaken , are all members of civil society having in common a proven track-record of sustained engagement with the affected peoples on matters of public concern. While we of the Task Force were nominated by the

Prime Minister on the recommendation of his Advisory Committee, the 92 members of the 15 Zonal Task Forces, eminent representatives of civil society in the particular sphere of activity or geographical area they come from, were chosen by us of the Task Force. I take the opportunity provided by this historic occasion to convey my profound appreciation of the significant & decisive role they have played at local level to ensure the success of our collective efforts.

This is then an entirely Civil Society Report that I present today. Consultations were conducted in accordance with a process decided on by us of Civil Society, inclusive of our Advisory Panel present here today. The success of the consultations conducted, in eliciting the diverse shades of experience suffered, the equally diverse perceptions of the solution required, & their understanding of the requisite adjustments in societal & inter-personal relations to enable us to look to a future of sustained peace, based on justice & equity is entirely due to the dedicated participation of civil society in this effort. This experience is a factor that requires to be given centrality of attention in the formulation of the many steps that remain to be taken to bring to successful completion the journey to lasting peace & reconciliation - a journey in which the consultations engendering this Report constitute a first step only.

And yet, while I emphasize again that these were wholly civil Society consultations, we found a unique element at work this time around -namely, the perception of the Affected that the State in the person of the govt of the Day was right behind in support of our effort. Filled with distrust & even active hostility as merited by their

experiences hitherto, they, nevertheless, came. And said: "If this Govt doesn’t right the wrongs we have suffered then no one will."

The perception of our consultations then, were as an opportunity they had won for themselves through the exercise of their franchise, to move on from an Era of Total Denial to one of together seeking solutions to wrongs suffered; the right to have a voice in decision-making, an incremental of democratic rights.

So they came in numbers; distrustful, full of reservation & hostility - who can blame them -but hopeful, & mature in their observations.

Please read our Report. In framing it we have sought throughout to be true to their word & their spirit. The old woman begging at road side in Mannar who wrote to the Task Force on a torn piece of paper with shaky hand; “If my son lost in the war was alive, I would not be begging”; the young mother finding the means to feed her children by the daily sale of food she prepares in her ramshackle home while sheltering her husband off-his-head from the effects of a brutal war; the child striving for normality in the context of school despite 6 feet in a refugee camp being the only home she knows; the rehabilitated ex-combatant gathering fellow sufferers in a network of mutual support displaying qualities of leadership and capacity for forward-planning so relevant to the forward national movement for us all; the wife of the disappeared from Hambantota relating the trials and down-right torture she has experienced in the 25 long years of fruitless search for him, but still finding the sympathy in her to say: “if it is like this for me, a Sinhala in the South, how must it be in the North?” They are all there in this Report- As also the severely injured ex-soldier who must perforce spend all his

remaining years in care, who observes however; “We have all suffered”; the Malaiha Tamil, the Adivaasi who engaged in vivid depiction of the discrimination and marginalization suffered over eons of time yet remain determined to make positive contribution to the country; the Muslim, clear in his sense of national identity despite anger at politically-fuelled attack in recent times; the senior officers who stand firm that rape in custody must be punished, if proved, irrespective of an over-all context of war; they are all in here resonant in their call for Reparation, Accountability, Non-recurrence, & facing up to Truth above all - i.e. the constituent components of transitional justice.

Our "Home", Sri Lanka, is in grave disrepair: jut a coat of paint & Broom & Duster will not put it to rights. But, the great family of our peoples in all their richness of diversity are on the brink of divesting themselves of the divisive frame-work of reference: "Them" & "Us", which was the inevitable outcome attendant on a prolonged civil war. Whether we decide to eat at the same hearth or separately, is immaterial. With justice & equity in the distribution of resources & opportunity, & structures designed to deliver Rights to all, we will undoubtedly arise all the stronger.

Let me conclude with our age-old prayer:

> Devo vassatu kaalena
> Raja Bhavatu Dhammiko

Thank you

**“வான்முகில் வழாது பெய்க!**

**மலிவளம் சுரக்க!**

**மன்னன் கோன்முறை அரசு செய்க!**

**குறைவிலாது உயிர்கள் வாழ்க!”**

Transliteration of the Tamil verses

“Vaan Muhil Valaathu Peiga

Mali Valam Surakka

Mannan Kon Murai Arasu Seiga

Kuraivilaathu Uyirgal Vaazgha”

English Translation

“Good enough rain for the world

Quality soil Resource for cultivation

King who rules as per justice and good guidelines

Problem free life for all lives”